யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

# தவணைப் பரீட்சை, யூன் - 2016

# Term Examination, June - 2016

FWC

| தரம் :- 13 (2016) | பொருளியல் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள் :-

❖ உப பிரிவு 'அ' உப பிரிவு 'ஆ' ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## உப பிரிவு 'அ'

**(இப்பிரிவிலிருந்து குறைந்தது இரு வினாக்களைத் தெரிவு செய்க)**

01) i) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் எவையென விளக்குக. (3 புள்ளி)

ii) கட்டளைப் பொருளாதாரமுறை மற்றும் சந்தைப் பொருளாதார முறை என்பன எவ்வாறு வேறுபட்ட வகையில் பொருளாதாரப் பிரச்சனைகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்கின்றன? (4 புள்ளி)

iii) பொருளாதார முறைமையொன்றில் தீர்மானம் மேற்கொள்கின்ற மூன்று முக்கிய குழுக்களும் எவை? (3 புள்ளி)

iv) பொருளியலில் தேவைகள், விருப்பங்கள் எனும் எண்ணக்கருக்களுக்கிடையிலான வேறுபாடுகள் யாவை? (4 புள்ளி)

v) உற்பத்தி வினைத்திறன் என்பது ($Productive\ efficiency$) எவ்வாறு உற்பத்தி சாத்திய வளைகோட்டின் மூலம் காட்டலாம்? (4 புள்ளி)

vi) ஊழிய நிரம்பல் எனும் எண்ணக்கருவை விளக்குக. (2 புள்ளி)

02) i) நுகர்வோர் கேள்வியை ஏற்படுத்துகின்ற பண்டமொன்றினது கேள்வி அளவினைத் தீர்மானிக்கும் காரணிகளைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

ii) பண்டமொன்றின் நிரம்பல் வளையி கீழிருந்து மேல் நோக்கிச் சரிந்து செல்வதற்குரிய காரணங்கள் எவை? (4 புள்ளி)

iii) நுகர்வோர் மிகை உற்பத்தியாளர் மிகை ஆகியவற்றை வரைபடம் ஒன்றைப் பயன்படுத்தி விளக்குக.? (4 புள்ளி)

iv) பின்வரும் சமன்பாடுகள் பொருளொன்றின் கேள்வி, நிரம்பல் சார்புகளை விபரிக்கின்றன.

$$Qd = 600 - 10P \ , \ Qs = -200 + 10P$$

அ) சமன்பாடுகளைப் பயன்படுத்தி சந்தையின் சமநிலை விலையையும், சமநிலைத் தொகையையும் கணிப்பிடுக. (2 புள்ளி)

ஆ) பொருளின் மீது அலகொன்றிற்கு ரூபா 10 உற்பத்தி மானியமாக வழங்கப்படுமாயின் நுகர்வோன் செலுத்தும் விலை, உற்பத்தியாளருக்குக் கிடைக்கும் விலை யாது? (4 புள்ளி)

இ) மானியம் வழங்கப்பட்ட பின்னர் நுகர்வோர் மிகை யாது? (2 புள்ளி)

03) i) நிறைபோட்டி நிறுவனங்கள் பூரண நெகிழ்வுள்ள கேள்வி வளையியை எதிர்கொள்வது ஏன்? (4 புள்ளி)

ii) அளவுத்திட்டச் சிக்கனங்கள் தோன்றுவதற்குரிய காரணங்கள் யாவை? (4 புள்ளி)

iii) இயற்கைத் தனியுரிமை எனும் எண்ணக்கருவினை விளக்குக. (4 புள்ளி)

iv) தனியுரிமை மற்றும் தனியுரிமைப் போட்டி நிறுவனங்கள் என்பவற்றின் ஒத்த பண்புகளைப் பட்டியலிடுக. (4 புள்ளி)

v) நிறைபோட்டி நிறுவனமொன்றின் இலாப உச்சப்படுத்தல் வெளியீடு $200$ அலகுகளில் எல்லைச் செலவு $100$ ரூபாவாகவும் நிறுவனத்தின் மொத்த மாறும் செலவு $(TVC)$ $13000$ ரூபாவாகவும் மொத்த அசாதாரண இலாபம் ரூபா $4000$ ஆகவும் உள்ளதாகக் கருதுக.

அ) நிறுவனத்தின் சராசரி நிலையான செலவின் பெறுமதி யாது? (2 புள்ளி)

ஆ) நிறுவனத்தின் மொத்த செலவின் பெறுமதி யாது? (2 புள்ளி)

04) i) தேசிய வருமானக் கணிப்பீட்டில் மொத்த உள்நாட்டு வருமானத்தின் மூலாதாரங்கள் எவை? (4 புள்ளி)

ii) தேசிய வருமானக் கணிப்பீட்டின் வரையறைகள் யாவை? (4 புள்ளி)

iii) செலவீட்டு அணுகுமுறையின் படி மொத்த உள்நாட்டு உற்பத்தியினை எவ்வாறு கணிப்பீடு செய்யலாம்? (4 புள்ளி)

iv) கருதுகோள் ரீதியான திறந்த பொருளாதாரமொன்றினது தேசிய கணக்குகள் தொடர்பான தரவுகள் வருமாறு

| வகை | பெறுமதிகள் மில்லியன் ரூபா |
|---|---|
| மொத்த முதலீடு | 1000 |
| தனியார் நுகர்வு | 4500 |
| அரசாங்கக் கொள்வனவு | 1200 |
| தேறிய முதலீடு | 600 |
| அரச பாதீட்டு மிகை | 100 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (நடைமுறை விலைகளில்) | 8000 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ) தேறிய உள்நாட்டுற்பத்தி (2 புள்ளி)

ஆ) தேறிய ஏற்றுமதிகள் (2 புள்ளி)

இ) தேறிய வரிகள் (2 புள்ளி)

ஈ) செலவிடத்தகு தனியாள் வருமானம் (2 புள்ளி)

05) i) எளிய பொருளாதாரம் ஒன்றின் தேசிய வருமானச் சமநிலையினை வரைபொன்றினைப் பயன்படுத்தி விளக்குக. (3 புள்ளி)

ii) எல்லை நுகர்வு நாட்டத்திற்கும் முதலீட்டுப் பெருக்கிக்குமிடையிலான தொடர்பினை விளக்குக. (3 புள்ளி)

iii) ஓர் திறந்த பொருளாதாரமொன்றினது மொத்தக் கேள்வியின் கூறுகளை விளக்குக. (4 புள்ளி)

iv) கற்பிதமான பொருளாதாரமொன்றில் வருமானம் 5000 மில்லியனாக உள்ளபோது சராசரி நுகர்வு நாட்டம் $(APC)$ 0.85 ஆகும். வருமானம் 5000 ரூபாவால் அதிகரித்த நிலையில் சராசரி சேமிப்பு நாட்டம் $(APS)$ 0.20 ஆகும் எனக் கருதுக.

அ) பொருளாதாரத்தின் நுகர்வு அட்டவணையினைத் தயாரித்து எல்லை நுகர்வு நாட்டத்தின் $(MPC)$ பெறுமதியினைக் கணிக்குக. (2 புள்ளி)

ஆ) முதலீடு 200 மில்லியனாகவும் அரசாங்க கொள்வனவுகள் 200 மில்லியனாகவும் அமையுமாயின் சமநிலை வருமான மட்டத்தின் பெறுமதி யாது? (3 புள்ளி)

இ) அரசாங்க செலவீட்டுப் பெருக்கி, வரிப்பெருக்கி என்பவற்றின் பெறுமதி யாது? (2 புள்ளி)

ஈ) நிறைதொழில் மட்ட வெளியீடு 4600 மில்லியன் எனக் கருதுக.
நிறைதொழில் மட்ட வெளியீட்டை அடைய அரசாங்க செலவினை எந்தளவில் அதிகரிக்க வேண்டும்? மாறாக வரி அறவீட்டை எந்தளவில் குறைத்தால் நிறை தொழில் மட்டத்தை அடைய முடியும்? (3 புள்ளி)

## உப பிரிவு 'ஆ'

**(இப்பிரிவிலிருந்து குறைந்தது இரு வினாக்களைத் தெரிவு செய்க)**

06) i) பொது மக்கள் பணத்தினை பணமாகத் திரட்டி வைத்திருப்பதன் அமையச் செலவு யாது? (2 புள்ளி)

ii) வங்கி முறையானது பணத்தை உருவாக்குவதற்குரிய எடுகோள்கள் எவை? (4 புள்ளி)

iii) உயர்வலுப்பணம் எக்காரணிகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது? (4 புள்ளி)

iv) பொருளாதாரமொன்றின் $(M_1)$ பணநிரப்பல் 1200 மில்லியனாகவும் வங்கிகளில் பொதுமக்களது கேள்வி வைப்புக்கள் 1000 மில்லியனாகவும் வங்கிகளின் காசொதுக்கு வீதம் 20 சதவீதமாகவும் உள்ளதாகக் கருதுக?

அ) பணப் பெருக்கியின் பெறுமானம் யாது? (2 புள்ளி)

ஆ) மத்திய வங்கி அரசுக்கு வழங்கிய கடன் காரணமாக பணநிரப்பல் 300 மில்லியனால் அதிகரித்துள்ளதாயின் அரசுக்கு வழங்கிய கடன் தொகை யாது? (3 புள்ளி)

v) வங்கி முறைமையிலுள்ள வணிக வங்கியொன்றிடம் காசு ஒதுக்குகள் 400 மில்லியன் கடன்கள் ரூபா 1600 மில்லியன் மற்றும் வைப்புக்கள் 2000 மில்லியன் உள்ளதாகக் கருதுக?

அ) வங்கிகள் 8 சதவீத காசொதுக்கினைப் பேணுகின்றதாயின் வங்கி வழங்கக்கூடிய உச்சக்கடன் அளவு யாது? (2 புள்ளி)

ஆ) பணநிரம்பலில் ஒரு விரிவாக்கத்தை ஏற்படுத்த மத்திய வங்கி திறந்த சந்தை நடவடிக்கைகளை எவ்வாறு பயன்படுத்துமென விளக்குக? (3 புள்ளி)

07) i) பின்வரும் ஒவ்வொரு பொருட்கள் சேவைகளையும் வரைவிலக்கணப்படுத்தி ஒவ்வோர் உதாரணம் தருக.

அ) பிராந்திய பொதுப் பொருள்

ஆ) பொது வளம் (4 புள்ளி)

ii) இலங்கையின் வரி வருமான மூலங்கள் எவை? மொத்த வருமானத்தில் அவற்றின் சதவீத பங்களிப்பு யாது? (5 புள்ளி)

iii) சந்தை தோல்விகளைச் சரிசெய்வதற்கு எவ்வழிகளில் அரசு பங்களிப்புச் செய்கின்றது? (5 புள்ளி)

iv) புறச் செலவுகள் உள்ள நிலையில் சந்தை முறைமை சமூகத்திறன் வாய்ந்த வெளியீட்டு மட்டத்தினைக் கொண்டிருப்பதில்லை. வரிப்படமொன்றின் மூலம் விளக்குக. (4 புள்ளி)

v) வெளிவாரிச் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எவ்வழி முறைகளைக் கையாளுகின்றது? (2 புள்ளி)

08) i) அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகள் ஒரு அலகு உழைப்பினைப் பயன்படுத்தி கோதுமை துணி ஆகியவற்றை உற்பத்தி செய்யும் நிலைமையினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| நாடு | கோதுமை $kg$ | துணி மீற்றர் |
|---|---|---|
| அமெரிக்கா | 6 | 3 |
| கனடா | 1 | 2 |

அ) அமெரிக்காவில் 10 அலகு உழைப்பும் கனடாவில் 20 அலகு உழைப்பும் உள்ளதாயின் இரு நாடுகளதும் உற்பத்தி சாத்தியவளைகோடுகளை வரைக. (4 புள்ளி)

ஆ) இரு நாடுகளும் ஒப்பீட்டு நன்மையுள்ள பொருள் மீது முழு வளங்களையும் பிரயோகிக்குமாயின் உற்பத்திப் புள்ளி எவ்வாறு அமையும் என்பதை வளைகோட்டிற் காட்டுக. (2 புள்ளி)

இ) இரு நாடுகளும் ஒன்றுக்கு ஒன்று எனும் வர்த்தக விகிதத்தில் பண்டங்களைப் பரிமாற்றிக் கொள்ளுமாயின் நுகர்வுச் சாத்திய வளைகோடுகளை வரைக. (2 புள்ளி)

ii) வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஆதரவான வாதங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

iii) மதிக்கும், நிருவகிக்கப்பட்ட நாணயமாற்று வீதங்களை வேறுபடுத்துக. (4 புள்ளி)

iv) மொத்த ஏற்றுமதி வருமானத்தில் துறைவாரியான பங்களிப்பு யாது? (4 புள்ளி)

09) i) பொருளாதார வளர்ச்சியும் பொருளாதார வளர்ச்சி வீதமும் வேறுபட்ட எண்ணக் கருக்களா? விளக்குக. (4 புள்ளி)

ii) மனித அபிவிருத்திச் சுட்டி பற்றிக் கருத்துரைக்குக. இச்சுட்டி தொடர்பாக இலங்கையின் அண்மைக்காலப் போக்குகளைப் பரிசீலிக்குக. (4 புள்ளி)

iii) பொருளாதார வளர்ச்சி இலங்கை அரசாங்கத்தின் பிரதான குறிக்கோளாகக் கருதப்படுவதேன்? (4 புள்ளி)

iv) மக்களின் வாடிக்கைத் தரத்தினை அதிகரிப்பதற்கு பொருளாதார வளர்ச்சிக்கு மேலதிகமாக பூர்த்தியாக்கப்பட வேண்டிய நிபந்தனைகள் யாவை? (4 புள்ளி)

v) நடுத்தர நீண்டகால அடிப்படையில் இலங்கையில் உயர்வான பொருளாதார வளர்ச்சியினை எய்துவதற்குத் தடையாகவுள்ள காரணிகள் யாவை? (4 புள்ளி)

10) i) முழு வறுமையையும் சார்பு வறுமையையும் வேறுபடுத்துக. (4 புள்ளி)

ii) வறுமைக்குச் சார்பான பொருளாதார வளர்ச்சியினை எய்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவை? (4 புள்ளி)

iii) நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி (*Sustsinable Development*) என்றால் என்ன? அதன் முக்கிய மூன்று விடயங்களும் எவை? (5 புள்ளி)

iv) இலங்கையினது குடித்தொகையின் நிலைமாற்றத்தின் பண்புகள் எவை? (4 புள்ளி)

v) இலங்கையின் ஊழியப் படைப்பின் பங்குகொள்ளல் வீதம் எவ்வாறு வரையறுக்கப்படுகின்றது? (3 புள்ளி)